DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.

**CASE NO.STC.No. 99/2025**

**PW- 2**

| | | |
|---|---|---|
| Name | : | அபிநயா(LW-3) |
| Father's Name | : | பிரேம்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

Date: 18.02.2026

**விசாரணை தொடங்கும் நேரம்: மதியம் 12.06**

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

**1.** நான் நாமக்கல் மாவட்டம் மோகனூர் ஏ. மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். 10.09.2024ம் தேதி நானும், எனது கணவர் சாட்சி 2 பிரேம்குமார் எனது மகன் ரொனால்டோ ஆகியோர் நாமக்கல் பூங்காவிற்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக நாமக்கல் – திருச்சி சாலையில் வடக்கிலிருந்து– தெற்குநோக்கி இரவு 8 மணியளவில் என்.புதுபட்டி வடக்குமேடு பேருந்துநிறுத்தம் அருகே TN 88 H 7349 பதிவெண் கொண்ட XL இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது அதே சாலையில் தவறான திசையில் TN 33 BC 5655 பதிவெண் கொண்ட கார் எங்களுக்கு முன்னால் நடந்து சென்ற நபர் மீது மோதி மேற்கொண்டு வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. காரின் ஓட்டுநர் காரை ஒலட்டிக் கொண்டு ஓட்டிவந்தார். விபத்தில் எனக்கு இடுப்பு உள்ளிட்ட இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. எனது கணவருக்கு 4 பற்கள் உடைந்துவிட்டது. உடலில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டிருந்தது. எனது மகனுக்கு வலது கண்ணுக்கு கீழ் முன் நெற்றியில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. எங்களை சிகிச்சைக்காக MM மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுநரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. போலீசார் விசாரணையில் நான் CM மருத்துவமனையில் சிசிச்சைக்கு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல MM மருத்துவமனை என்று சொன்னேன். நான் முதலில் CM மருத்துவமனைக்கு சென்று பின்னர் MM மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை போலீசார்

விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் சரிக்கு விழுந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எங்களுக்கு பின்னால் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கு பின்னால் வந்த வாகனத்தின் ஓட்டுநர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். எனக்கு, எனது கணவர் மற்றும் குழந்தைக்கு ஏற்பட்ட காயமானது எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல நான் மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக வண்டியிலிருந்து சறுக்கி கீழே விழுந்ததை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியால் எங்கள் மூவருக்கும் வேறு யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

**விசாரணை முடியும் நேரம்: மதியம் 12.20 மணி**